ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2020.11.09 |

# வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 செத்தெம்பர்

## முக்கிய பண்புகள்




இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள்> பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
[https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin](https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin)

## பொதுநோக்கு

இலங்கையின் வெளிநாட்டுத் துறையானது வர்த்தகப் பற்றாக்குறையில் தொடர்ச்சியான வீழ்ச்சி, தொழிலாளர் பணவனுப்பல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஏற்பட்ட உறுதிப்பாடு என்பன மூலம் துணையளிக்கப்பட்டு 2020 செத்தெம்பரில் மீட்சியடைந்தது. மாதகாலப்பகுதியில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளில் எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிக மீளுயர்வு அத்துடன் வணிகப்பொருள் இறக்குமதிகளில் குறைவு என்பன காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வர்த்தகப் பற்றாக்குறை 2020 செத்தெம்பரில் மேம்பட்டது. 2020 செத்தெம்பரில் தொழிலாளர் பணவனுப்பல்கள், 2011இன் இறுதியிலிருந்து மிக உயர்வான ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. நிதியியல் கணக்கில் அரசாங்கப் பிணையங்கள் சந்தையானது மாதகாலப்பகுதியில் சிறிதளவு உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்த அதேவேளை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது. உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள், செலாவணி வீதம் மீதான அழுத்தத்தினைத் தளர்த்தியதுடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரித்துக்கொள்வதற்கு வெளிநாட்டுச் செலாவணியினை தேறிய அடிப்படையொன்றில் ஈர்ப்பதற்கு மத்திய வங்கியினை இயலச்செய்தது. இவ் அபிவிருத்திகளைப் பிரதிபலித்து இலங்கை ரூபா 2020 செத்தெம்பர் மாதகாலப்பகுதியில் உயர்வடைந்தது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்[அ]

| வகை | செத்தெம்பர் 2019 ஐ.அ.டொ. மில் | செத்தெம்பர் 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-செத் 2019 ஐ.அ.டொ. மில் | சன-செத் 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 954 | 1,000 | 4.8 | 8,984 | 7,445 | -17.1 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 1,711 | 1,525 | -10.9 | 14,596 | 11,782 | -19.3 |
| வர்த்தக மீதி | -757 | -525 | | -5,612 | -4,337 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 205 (ஆ) | - | - | 2,594 (ஆ) | 956 (இ) | -63.1 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 516 | 703 | 36.1 | 4,930 | 5,049 | 2.4 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -7 | -42 | | 15 | 215 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 276 | 124 | | 5,957 | 1,427 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 22 | 10 | | 454 | 102 | |
| நீண்ட காலக் கடன்கள் (உ) | 254 | 113 | | 1,103 | 1,325 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 4,400 | - | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (ஊ) | | | | 535 | 345 | |
| திரண்ட நிலுவை | | | | 789 | -1,104 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்

(ஈ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

(உ) அரசாங்கத்திற்கான வெளிநாட்டுக் கடன்களுக்கான தரவுகள் மாதாந்தத் தரவுகளுக்காக ஓகத்து மாதத்திற்காகவும் சிறந்த தரவுகளுக்காகவும் முதல் எட்டு மாதங்களுக்கு மாத்திரம் கிடைக்கப்பெறுகின்றது.

(ஊ) இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக நியதிகள்

- 2020 செத்தெம்பரில் **வர்த்தகக் கணக்கில்** ஐ.அ.டொலர் 525 மில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்று பதிவாகியது இது, 2019 செத்தெம்பரில் பதிவாகிய ஐ.அ.டொலர் 757 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினை விட கணிசமாக குறைவானதாகக் காணப்படுகின்றது. மாத காலப்பகுதியில் வர்த்தக பற்றாக்குறை மேம்பட்டமைக்கு 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பரில் குறைவான இறக்குமதி அளவு மற்றும் உயர்வான ஏற்றுமதி அளவு காரணமாக அமைந்தன.

- 2020 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரை வர்த்தகக் கணக்கின் திரண்ட பற்றாக்குறையானது 2019இன் அதேகாலப்பகுதியில் பதிவாகிய ஐ.அ.டொலர் 5,612 மில்லியன் கொண்ட பற்றாக்குறையிலிருந்து ஐ.அ.டொலர் 4,337 மில்லியனுக்கு சுருக்கமடைந்தது. இப்பெறுபேற்றுக்கான பிரதான பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 01இல் காட்டப்பட்டுள்ளன.

- அதேவேளை, **வர்த்தக நியதிகள்,** அதாவது இறக்குமதிகளின் விலைக்கான ஏற்றுமதி விலைகளின் விகிதாசாரமானது இறக்குமதி விலைகளில் காணப்படும் வீழ்ச்சியினைவிட ஏற்றுமதி விலைகள் உயர்வான வேகத்தில் வீழ்ச்சியடைவதன் காரணமாக 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பரில் 1.1 சதவீதத்தினால் சீர்குலைந்தது.

**வரைபடம்: 1 : 2020 சனவரி – செத்தெம்பர் வரை வர்த்தகப் பற்றாக்குறை வீழ்ச்சிக்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)**




**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019 – 2020)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக நியதிகள் (2019 - 2020)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- தற்கால உலகளாவிய சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் ஏற்றுமதித் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயின் ஆரம்ப நோய்ப்பரவல் தொடக்கம் அதன் திடீர் வீழ்ச்சி மற்றும் தீடீர் எழுச்சி வடிவிலான ("V" வடிவிலான) மீட்சியினையும் எடுத்துக்காட்டி 2020 செத்தெம்பரில் **வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படை மற்றும் மாதத்திற்கு மாதம் அடிப்படை என்ற இரண்டிலும் அதிகரித்தன. 2020 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 1,000 மில்லியன் கொண்ட வணிகப்பொருள் ஏற்றுமதிகள் 2019 செத்தெம்பரின் ஐ.அ.டொலர் 954 மில்லியினைவிட ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.8 சதவீதத்தினால் உயர்வாகவிருந்தது. இது, 2020 ஓகத்தில் பதிவாகிய ஐ.அ.டொலர் 947 மில்லியன் கொண்ட ஏற்றுமதிகளை விடவும் 5.6 சதவீதம் உயர்வானதாகும். ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் மற்றும் கனிம ஏற்றுமதிகளில் காணப்படும் வீழ்ச்சியினை விஞ்சிய அநேகமான வேளாண்மைப் பொருட்கள் மற்றும் சில கைத்தொழில் உற்பத்தி வகைகளின் ஏற்றுமதி அதிகரிப்பானது ஒட்டுமொத்த ஏற்றுமதிகளின் அதிகரிப்பிற்குப் பங்களித்தது.

- வேளாண்மைப் பொருட்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள், தேங்காய் ஏற்றுமதிகள் (உள்ளீடு மற்றும் உள்ளீடற்றவை இரண்டும்), வாசனைத்திரவியங்கள் (பிரதானமாக கறுவா), தேயிலை, சிறு வேளாண்மை ஏற்றுமதி உற்பத்திகள் (பிரதானமாக வெற்றிலை), கடலுணவு என்பன மூலம் முன்னிலை வகித்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 செத்தெம்பரில் 10.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. ஏற்றுமதிகள் அளவுகள் வீழ்ச்சியடைந்திருந்தும் (2.8 சதவீதம்) தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான உயர்வான வருவாய்களுக்கு (3.3 சதவீதம்) உயர்வான விலைகள் (6.3 சதவீதம்) துணையளித்திருந்தன.

- சில ஏற்றுமதித் துறைகளின் பலவீனமான செயலாற்றம் மற்றும் ஏனையவற்றின் உயர்வான செயலாற்றம் என்பனவற்றின் இணைந்த விளைவொன்றாக 2020 செத்தெம்பரில் கைத்தொழில்சார் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான ஒட்டுமொத்த வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.6 சதவீதத்தினால் அதிகரித்தன. குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை அடையாளப்படுத்திய துறைகள் பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்த பிளாத்திக்கு ஆடை, கையுறைகள் மற்றும் முகக்கவசம் போன்ற தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண உற்பத்திகள், புடவைகள் மற்றும் ஆடைகளின் கீழ் தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள், அத்துடன் இறப்பர் உற்பத்திகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இம் மூன்று வகைகளினதும் மொத்த அதிகரிப்பானது ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சியினை விஞ்சிச் சென்றது. பெறுமதிசேர்க்கப்பட்ட தேங்காய் உற்பத்திகளின் மூலம் முன்னிலை வகித்து இவ்வகை வளர்ச்சியின் கீழ் அநேகமான பெறுமதி சேர்க்கப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதிகள் மூலம் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. கையுறைகள் தவிர டயர்கள் போன்ற வேறு இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் அதிகரித்தன. அதேவேளை, இலங்கையில் அச்சிடப்பட்ட வேறு நாடுகளின் நாணயத் தாள்களின் ஏற்றுமதிகளின் அதிகரிப்பின் காரணமாக அச்சுக் கைத்தொழில் உற்பத்திகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்பட்டது. வருவாய்களில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்த கைத்தொழில்சார் ஏற்றுமதித் துறைகளில் ஆடைகள்; இரத்தினக்கற்கள், வைரக்கற்கள் மற்றும் ஆபரணங்கள்; பெற்றோலிய உற்பத்திகள்; மற்றும் அடிப்படை உலோகங்கள் அத்துடன் பொருட்கள் என்பன உள்ளடங்கியிருந்தன. ஐக்கிய அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகள் குறைவடைந்து அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் சிறியளவு அதிகரித்ததன் மூலம் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 3.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. விலைகளில் குறைப்பு மற்றும் வழங்கல் செய்யப்பட்ட நீர்க்கல எரிபொருட்களின் அளவுகளில் குறைவு என்பனவற்றின் மூலம் பெற்றோலிய உற்பத்திகள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை கனிம ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்தன.

- ஏற்றுமதி அளவுச் சுட்டெண்ணானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 18.4 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை அலகுப்பெறுமதிச் சுட்டெண், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2020 செத்தெம்பரில் 11.5 சதவீதத்தினால் சீர்குலைந்து ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பானது சராசரியாக உயர்வான அளவுகள் மூலம் தூண்டப்பட்டிருந்தது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | செத்தெம்பர் 2019 ஐ.அ.டொ.மில் | செத்தெம்பர் 2020 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) | சன-செத் 2019 ஐ.அ.டொ.மில் | சன-செத் 2020 ஐ.அ.டொ.மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **747.6** | **774.5** | **3.6** | **7,077.8** | **5,680.0** | **-19.7** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 33.6 | 45.6 | 36.0 | 337.3 | 348.6 | 3.3 |
| விலங்குத்தீன் | 6.1 | 8.3 | 34.8 | 94.9 | 83.9 | -11.7 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 450.2 | 433.7 | -3.7 | 4,186.8 | 3,286.8 | -21.5 |
| இதில் ஆடைகள் | 419.1 | 391.6 | -6.6 | 3,897.6 | 2,919.7 | -25.1 |
| புடவைகள் | 23.0 | 26.6 | 15.9 | 210.5 | 181.6 | -13.7 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.2 | 15.5 | 89.3 | 78.7 | 185.5 | 135.7 |
| இறப்பர் உற்பத்திகள் | 70.9 | 78.0 | 9.9 | 662.2 | 566.9 | -14.4 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.6 | 20.2 | -17.9 | 224.5 | 122.9 | -45.3 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 33.0 | 35.8 | 8.5 | 308.0 | 245.3 | -20.4 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.0 | 8.2 | 17.4 | 127.5 | 54.4 | -57.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 40.3 | 28.6 | -29.0 | 367.9 | 296.8 | -19.3 |
| இரசாயன உற்பத்திகள் | 13.7 | 16.0 | 16.5 | 134.1 | 123.7 | -7.8 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 10.6 | 9.8 | -7.5 | 101.4 | 74.4 | -26.6 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 1.7 | 10.4 | 512.5 | 33.1 | 36.3 | 9.6 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 8.1 | 5.9 | -27.4 | 82.2 | 44.0 | -46.4 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.8 | 34.1 | 483.7 | 55.1 | 106.7 | 93.7 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 14.3 | 8.6 | -39.9 | 135.3 | 84.6 | -37.5 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.2 | 3.2 | 1.1 | 22.8 | 16.6 | -27.5 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 24.4 | 28.1 | 15.2 | 204.7 | 188.3 | -8.0 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **201.5** | **222.5** | **10.4** | **1,868.9** | **1,738.5** | **-7.0** |
| தேயிலை | 110.4 | 114.0 | 3.3 | 1,025.3 | 919.6 | -10.3 |
| இறப்பர் | 1.5 | 2.1 | 41.0 | 20.1 | 19.9 | -0.9 |
| தேங்காய் | 26.3 | 35.8 | 35.8 | 258.5 | 257.3 | -0.5 |
| வாசனைத்திரவியங்கள் | 31.4 | 38.6 | 22.9 | 234.8 | 233.1 | -0.7 |
| காய்கறிகள் | 2.9 | 2.3 | -18.6 | 24.1 | 28.5 | 18.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 3.1 | 2.7 | -12.2 | 25.8 | 19.7 | -23.7 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 10.0 | 10.8 | 7.8 | 80.0 | 111.1 | 38.8 |
| கடலுணவு | 15.9 | 16.2 | 1.8 | 200.4 | 149.4 | -25.5 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **3.3** | **1.7** | **-49.9** | **24.7** | **15.9** | **-35.4** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.4** | **1.3** | **-3.5** | **12.7** | **10.7** | **-15.8** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **953.8** | **1,000.0** | **4.8** | **8,984.0** | **7,445.0** | **-17.1** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- **வணிகப் பொருள் இறக்குமதிகள்** மீதான செலவினமானது 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பரில் ஐ.அ.டொலர். 1,525 மில்லியனுக்கு 10.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2020 மாச்சு தொடக்கம் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிப் போக்கில் சென்றது. 2020 மாச்சு முதல் தெரிவுசெய்யப்பட்ட அத்தியாவசியமற்ற பொருட்கள் இறக்குமதியினைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் அத்துடன் பன்னாட்டுச் சந்தையில் குறைவான எரிபொருள் விலைகள் என்பன இவ்வீழச்சிக்கு முதன்மையான காரணங்களாக அமைந்தன.

- எனினும், 2020 செத்தெம்பரின் இறக்குமதிச் செலவினமானது 2020 மாச்சு முதல் ஒவ்வொரு மாதத்திலும் பதிவாகிய இறக்குமதிச் செலவினத்தைவிட உயர்வாக இருந்ததுடன் 2020 ஓகத்து மாதத்தினை விட 18.3 சதவீதம் அதிகரித்தது. 2020 செத்தெம்பரில் பொறிகள் மற்றும் சாதனங்களின் இறக்குமதிகளின் அதிகரிப்பு இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது.

- 2020 செத்தெம்பரில் நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினமானது பிரதானமாக அரசாங்கத்தினால் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட தனிப்பட்ட பாவனைக்கான ஊர்திகள் இறக்குமதி, ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள் அத்துடன் ஏனைய பொருட்கள் இறக்குமதியில் வீழ்ச்சியின் காரணமாக 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 14.8 சதவீதத்தினால் குறைவடைந்தது. எனினும், பிரதானமாக சீனி, பால்மா மற்றும் தேங்காய் எண்ணெய் போன்றவற்றின் பாரியளவு இறக்குமதிகளின் காரணமாக உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் கணிசமாக உயர்வாகக் காணப்பட்டது. சீனி மற்றும் பால்மா இறக்குமதி அளவுகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. சீனி இறக்குமதி விலைகள் 2019 செத்தெம்பரினை விட 2020 செத்தெம்பரில் சிறிதளவு உயர்வாக இருந்த அதேவேளை, உலக சந்தை விலைகளுக்கு இசைவாக மொத்த பால்மா இறக்குமதி விலைகள் குறைவாக இருந்து வந்தன. இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்குக் கீழ் வராத அத்துடன் மருந்தாக்கல் பொருட்கள் (பிரதானமாக மருந்துகள்), தொலைத்தொடர்பு சாதனங்கள் (பிரதானமாக செல்லிடத்தொலைபேசிகள்), குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் சோறு சமைக்கும் சாதனங்கள் போன்ற வீட்டு சாதனங்கள் அத்துடன் மலசலகூடப் பொருட்கள் போன்ற குறைவான கட்டுப்பாடுகளுக்குக் கீழ் வருகின்ற உணவல்லா நுகர்வுப் பொருட்கள் அதிகரித்தன. மறுபக்கத்தில், காய்கறிகள், பழங்கள், வாசனைத்திரவியங்கள் மற்றும் குடிபானங்கள் போன்ற வேறு உணவுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்தது.

- இடைநிலைப் பொருட்கள் இறக்குமதி மீதான செலவினமானது 2019 செத்தெம்பருடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பரில் 11.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உலக சந்தையில் நிலவிய குறைவான பெற்றோலிய விலைகள் அதேபோன்று இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் குறைவு என்பனவற்றினைத் தொடர்ந்து எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் 39.5 சதவீத வீழ்ச்சி இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. சராசரி மசகு எண்ணெய் இறக்குமதி விலையானது 2019 செத்தெம்பரின் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 67.73 உடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பரில் பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 44.05ஆக இருந்தது. ஒட்டுமொத்த இறக்குமதிச் செலவினத்தினையும் குறைப்பதற்குப் பங்களித்த ஏனைய இடைநிலைப் பொருட்களாக புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், வளமாக்கி, வைரக்கற்கள் மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பன காணப்பட்டன. எனினும், அடிப்படை உலோகங்கள் (பிரதானமாக இரும்பு மற்றும் உருக்கு), கோதுமை, முதன்மை வடிவத்திலான பிளாத்திக்கு மற்றும் பொருட்கள் அத்துடன் இரசாயன உற்பத்திகள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தது.

- முதலீட்டுப் பொருட்களின் இரு துணை வகைகளும் அதாவது கட்டடப்பொருட்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் என்பன இரும்பு மற்றும் உருக்கு அத்துடன் அதன் பொருட்கள், சீமெந்து, செரமிக் உற்பத்திகள், அலுமினிய உற்பத்திகள், காப்பிடப்பட்ட கம்பிகள் மற்றும் வடங்கள் போன்ற கட்டடப் பொருட்களின் கீழுள்ள பொருட்கள் மற்றும் பேருந்துகள், முச்சில்லுவண்டிகள், ஏனைய வர்த்தக ரீதியான வாகனங்கள் அத்துடன் புகையிரத சாதனங்கள் போன்ற போக்குவரத்து சாதனங்களின் கீழ் வருகின்ற பொருட்கள் என்பன பிரதானமாக இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக அவதானிக்கத்தக்க வீழ்ச்சியொன்றினைக்

காண்பித்து முறையே 31.6 சதவீதம் 56.3 சதவீதம் கொண்ட இறக்குமதிச் செலவின் ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியினைக் காண்பித்தன. கட்டுப்பாடு விதிக்கப்படாத உழவு இயந்திரங்களின் இறக்குமதி அதிகரித்தது. பாரம் தூக்கிகள், பொறிகள் மற்றும் சாதனங்களுக்கான பாகங்கள் இறக்குமதியின் அதிகரிப்பின் பிரதான காரணமாக முதலீட்டுப் பொருட்களின் ஏனைய துணை வகைகள் அதாவது பொறிகள் மற்றும் சாதனங்கள் இறக்குமதிகள், 2019 செத்தெம்பருடனும் அதேபோன்று 2020 பெப்புருவரி தொடக்கம் ஓகத்து வரையான மாதாந்த இறக்குமதிகளுடனும் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பரில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. இதற்கு மேலதிகமாக, இலத்திரனியல் மற்றும் மின்சார பொறிகள் மற்றும் சாதனங்கள், மருத்துவ ஆய்வுகூட உபகரணங்கள், அலுவலக பொறிகள் மற்றும் வாயுச்சீராக்கி இயந்திரங்கள் போன்ற சிறிதளவு இறக்குமதிப் பங்கொன்றுடன் கூடிய அநேகமான ஏனைய பொருட்களும் அதிகரித்தன.

- இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் 2020 செத்தெம்பரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முறையே 0.4 சதவீதத்தினாலும் 10.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து குறைவான அளவுகள் மற்றும் குறைவான விலைகள் ஆகிய இரண்டின் மூலமும் இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தது என்பதனைக் குறித்துக்காட்டுகின்றன.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | செத்தெம்பர் 2019 ஐ.அ.டொ. மில் | செத்தெம்பர் 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-செத் 2019 ஐ.அ.டொ. மில் | சன-செத் 2020 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **312.8** | **266.5** | **-14.8** | **2,812.0** | **2,566.9** | **-8.7** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 92.2 | 125.2 | 35.9 | 1,009.3 | 1,148.9 | 13.8 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.6 | 3.1 | 18.1 | 24.8 | 24.1 | -2.9 |
| பால் உற்பத்திகள் | 8.9 | 24.1 | 171.3 | 225.0 | 253.0 | 12.5 |
| காய்கறிகள் | 20.0 | 16.2 | -19.3 | 207.6 | 262.5 | 26.4 |
| கடலுணவு | 14.3 | 14.0 | -1.6 | 160.0 | 153.5 | -4.1 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 16.2 | 38.0 | 134.2 | 142.6 | 200.6 | 40.6 |
| வாசனைத்திரவியங்கள் | 11.4 | 10.2 | -11.1 | 79.5 | 94.3 | 18.6 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 18.7 | 19.7 | 5.1 | 169.7 | 160.9 | -5.2 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 220.6 | 141.3 | -36.0 | 1,802.7 | 1,418.0 | -21.3 |
| தனியாள் ஊர்திகள் | 70.1 | 0.6 | -99.1 | 566.5 | 281.4 | -50.3 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 48.9 | 56.4 | 15.5 | 399.4 | 441.7 | 10.6 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 15.3 | 17.0 | 11.6 | 146.6 | 117.4 | -19.9 |
| ஆடை மற்றும் ஆடைப்பொருட்கள் | 29.2 | 15.4 | -47.1 | 203.6 | 153.1 | -24.8 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 16.3 | 21.0 | 29.1 | 173.4 | 195.6 | 12.8 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 18.0 | 12.9 | -28.5 | 122.7 | 104.4 | -14.9 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 22.9 | 17.9 | -22.0 | 190.5 | 124.3 | -34.7 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,000.7** | **883.3** | **-11.7** | **8,380.5** | **6,575.8** | **-21.5** |
| எரிபொருள் | 353.7 | 214.0 | -39.5 | 2,930.5 | 1,905.2 | -35.0 |
| இதில் மசகெண்ணெய் | 98.6 | 63.6 | -35.5 | 729.3 | 451.2 | -38.1 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 232.1 | 134.9 | -41.9 | 2,052.9 | 1,309.3 | -36.2 |
| நிலக்கரி | 23.0 | 15.5 | -32.6 | 148.3 | 144.7 | -2.4 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 20.7 | 9.8 | -52.7 | 139.1 | 67.2 | -51.7 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 250.3 | 208.3 | -16.8 | 2,127.1 | 1,665.5 | -21.7 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 40.6 | 37.7 | -7.3 | 336.1 | 277.1 | -17.6 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 13.6 | 15.1 | 10.6 | 140.7 | 147.6 | 4.9 |
| கோதுமை மற்றும் சோளம் | 30.5 | 60.7 | 99.3 | 233.9 | 290.0 | 24.0 |
| அடிப்படை உலோகங்கள் | 42.5 | 75.4 | 77.3 | 408.7 | 321.9 | -21.2 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 50.2 | 64.6 | 28.7 | 445.1 | 388.5 | -12.7 |
| இரசாயன உற்பத்திகள் | 67.8 | 79.8 | 17.6 | 621.3 | 598.1 | -3.7 |
| வளமாக்கி | 30.0 | 14.7 | -50.9 | 167.5 | 139.0 | -17.0 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 22.5 | 19.5 | -13.4 | 174.9 | 165.4 | -5.5 |
| கனிம உற்பத்திகள் | 22.0 | 24.5 | 11.4 | 159.0 | 132.1 | -16.9 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 56.3 | 59.4 | 5.5 | 496.5 | 478.1 | -3.7 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **396.6** | **374.2** | **-5.7** | **3,398.4** | **2,627.4** | **-22.7** |
| பொறி மற்றும் கருவிகள் | 206.5 | 257.1 | 24.5 | 1,816.7 | 1,581.7 | -12.9 |
| கட்டடப் பொருட்கள் | 136.5 | 93.4 | -31.6 | 1,143.4 | 764.7 | -33.1 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 53.2 | 23.2 | -56.3 | 433.4 | 278.6 | -35.7 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.4 | 0.4 | 18.4 | 4.9 | 2.4 | -51.0 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.4** | **0.8** | **107.7** | **5.2** | **12.2** | **134.7** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,710.5** | **1,524.9** | **-10.9** | **14,596.1** | **11,782.2** | **-19.3** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **1,356.8** | **1,310.9** | **-3.4** | **11,665.6** | **9,877.1** | **-15.3** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகைக்காக அனைத்து விமான நிலையங்களும் துறைமுகங்களும் மூடப்பட்டிருந்தமையினால் 2020 செத்தெம்பரில் தொடர்ச்சியாக ஆறு மாதங்களாக சுற்றுலாப் பயணிகள் வருகைகள் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை. எனவே, 2020 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாதகாலப்பகுதியின் போது மொத்த **சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்** 2019இன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவாகிய 1,376,312 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 507,311ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்ற திரண்ட **சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்** 2019இன் தொடர்பான காலப்பகுதியிலிருந்து 63.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்து 2020 செத்தெம்பர் வரை ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 956 மில்லியனாகக் காணப்பட்டது.
- அதேவேளை, **தொழிலாளர் பணவனுப்பல்கள்** 2020 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 703 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 36.1 சதவீதம் கொண்ட ஆரோக்கியமான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்து தொடர்ச்சியாக நான்காவது மாதத்திற்காகவும் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இவ்வதிகரிப்பானது 2020 மார்ச்சு முதல் ஆறு மாதங்களாக அனுபவித்த திரண்ட வீழ்ச்சிகளின் பின்னர் முதற்தடவையாக தொழிலாளர் பணவனுப்பல்களின் திரண்ட வருவாய்கள் வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்வதற்கு முன்னிலை வகித்தது. அதற்கமைய, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரி தொடக்கம் செத்தெம்பர் வரையான காலப்பகுதியின் போது ஐ.அ.டொலர் 5,049 மில்லியனுக்கு 2.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

**வரைபடம் 8: சுற்றுலாப்பயணிகள் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி

**வரைபடம் 9: சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2020 செத்தெம்பரில் ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட **அரச பிணையங்கள்** சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 9 மில்லியன் தொகையுடைய வெளிநாட்டு முதலீட்டு தேறிய உட்பாய்ச்சலொன்று பதிவாகி 2020 சனவரி – செத்தெம்பர் வரையான காலப்பகுதியின் போது திரண்ட தேறிய உட்பாய்ச்சலை ஐ.அ.டொலர் 512 மில்லியனாகக் குறையச்செய்தது. ரூபாய் பெயர்குறிக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையின் வெளிநாட்டு முதலீட்டின் மொத்த வெளிநின்ற தோற்றப்பாடு 2020 செத்தெம்பர் இறுதியளவில் ஐ.அ.டொலர் 72 மில்லியனாக ஒப்பீட்டளவில் புறக்கணிக்கத்தக்கதாக காணப்பட்டது.
- 2020 செத்தெம்பரில் **கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின்** முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகளிலிருந்து ஐ.அ.டொலர் 42 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்டது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது 2020 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியின் போது திரண்ட அடிப்படையொன்றில் ஐ.அ.டொலர் 215 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.
- அதேவேளை, அரசாங்கத்திற்கான நீண்டகாலக் கடன்கள் 2020 ஓகத்தில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. (2020 ஓகத்து வரை மாத்திரம் தரவுகள் கிடைக்கப்பெறுகின்றன)

## பன்னாட்டு ஒதுக்குகள்

- **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** மட்டம் 2020 செத்தெம்பர் இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 6.7 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இது 4.7 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்குகின்ற மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 9.2 பில்லியனாக விளங்கி 6.5 மாதங்களைக் கொண்ட இறக்குமதிகளுக்கு போதுமானதாகவிருந்தது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- இலங்கை ரூபா, மாதத்தின் நடுப்பகுதியில் சில தளம்பல்களை எடுத்துக்காட்டியதன் பின்னர் 2020 செத்தெம்பர் காலப்பகுதியில் 0.3 சதவீத சிறிய உயர்வொன்றினைப் பதிவுசெய்தது. ஒட்டுமொத்தமாக 2020 ஏப்பிறல் நடுப்பகுதியில் அனுபவித்த பெறுமானத்தேய்வு அழுத்தத்தின் பின்னர் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் ஒப்பீட்டு ரீதியாக தொடர்ச்சியான உறுதிப்பாட்டினை எடுத்துக்காட்டி 2020 நவெம்பர் 06 வரையான காலப்பகுதியின் போது தற்போது வரையிலும் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 1.5 சதவீதம் கொண்ட சிறிய தேய்வொன்றினை மாத்திரம் பதிவுசெய்தது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரிக்கும் நோக்குடன் மத்திய வங்கியானது 2020 செத்தெம்பரிலும் வெளிநாட்டு செலாவணியினைக் கொள்வனவு செய்வதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ந்தும் தலையிட்டது. 2020 ஒத்தோபர் இறுதிவரை ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியானது தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 302.6 மில்லியனை ஈர்த்துள்ளது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலித்து யூரோ, ஸ்ரேலிங் பவுண், யப்பானிய யென் மற்றும் அவுத்திரேலிய டொலர் என்பவற்றுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்த அதேவேளை நவம்பர் 06 வரை 2020 இல் இந்திய ரூபாய்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | (2020 நவெ 06 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | -1.5% |
| யூரோ | -12.7% | +2.6% | -6.6% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | -2.8% | -1.5% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | -6.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | -5.0% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | +2.2% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி